நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 180/2019

## P.W. 7 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | செந்தில்குமார் |
| தந்தை / கணவர் பெயர் | : | சின்னுசாமி |
| கிராமம் | : | பொன்னகர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW7** |
| வயது | : | 45 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், நவம்பர் மாதம், 01–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 11.35 PM

1. இறந்த நிலையில் உடும்பு கைப்பற்றப்பட்டதாக வன அலுவலர்தான் என்னிடம் சொன்னார். அந்த உடும்பை கடித்த விலங்கு நாய் என்று என்னால் உறுதியாக சொல்லமுடியாது. ஆனால் அது மாமிசம் உண்ணும் விலங்காகும். 12.11.2012 ம் தேதி பிரதே பரிசோதனை மேட்டுர் வனசரகர் அலுவலகத்தில் மாலை 04.30

மணிக்கு ஆரம்பித்து 05.30 மணிக்கு முடித்தேன்.

2. அ.சா.8 பிரேத பரிசோதனை அறிக்கையில் உடும்பை கடித்த காயம் மற்றும் அதிர்ச்சிதான் இறப்பிற்கு காரணம்  என்றுதான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த அறிக்கையில் குறிப்பாக நாய் கடித்து தான் இறந்ததாக நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மாமிசம் உண்ணும் விலங்கு கடித்ததாக குறிப்பிட்டுள்ளேன்.
3. பிரேத பரிசோதனை அறிக்கை 12.11.2012 ம் தேதி வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. 12.11.2012 ம் தேதி பிரேத பரிசோதனை மேற்கொண்டு 31.07.2013 ம் தேதி அறிக்கை வழங்கியுள்ளேன். நான் பிரேத பரிசோதனை அறிக்கையில் 12.11.2012 ம் தேதி தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.
4. நான் பிரேத பரிசோதனை அறிக்கையில் நாய் கடித்து இறந்ததாக குறிப்பிட்டுள்ள விவரம் வன சரக அலுவலர் கொடுத்த கடிதத்தின் அடிப்படையில்தான் குறிப்பிட்டுள்ளேன். நாய்தான் கடித்தது என்று நான் கண்டறிந்து குறிப்பிடவில்லை. ஆனால் அது நாயாக கூட இருக்கலாம். நாய் தான் கடித்தது என்று என்னால் உறுதியாக சொல்லமுடியாது என்றால் சரிதான்.
5. நான் தயார் செய்த பிரேத பரிசோதனை அறிக்கைக்கு மாறான சாட்சியத்தை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கது அல்ல என்றால் சரியல்ல.

**அரசு தரப்பில் மறுவிசாரணைக்கு அனுமதி கேட்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

1. நாய் மாமிசம் உண்ணும் விலங்கு என்றால் சரிதான். காயத்தின் தன்மையை நான் ஆய்வு செய்த வகையில் அந்த காயம் நாய் கடித்ததால் ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது என்றால் சரிதான். நாயின் உடைய பல் நீளம், அகலத்தை வைத்து பார்க்கும் பொழுது இறந்துபோன உடும்பை நாய் கடித்திருக்க வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நாய், செந்நாய், நரி ஆகிய விலங்குகளுக்கு பல் அமைப்பு ஒன்றுபோல்தான் இருக்குமென்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 11.55 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா. கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**